**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.வ.எண். | : | 56/2024 | பி,வா.சா. | : | 1 |
| பெயர் | : | சேக் ராவுத்தர் (எ) சேக் முகம்மது | த/பெ. | : | சின்ன முகம்மது ராவுத்தர் |
| தாலுகா | : | நத்தம் | கிராமம் | : | நடுவனூர் |
| தேதி | : | 28.01.2026 | வயது | : | 75/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. வாதி காஜா முகைதீன் என்பவர் எங்கள் ஊரின் ஜமாத் தலைவர் என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள முஸ்லீம் குடும்பத்தினர் குடும்ப நிகழ்வுகளில் வாதி கலந்து கொள்வார் என்றால் சரிதான். வாதி மதுரையில் உள்ள சூர்யா நகரில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணமானது பத்திர அலுவலகத்தில் சார்பதிவாளர் அவர்களால் பதியப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் முகமது ராவுத்தன் மகன் கனி ராவுத்தர் பெயரில் பட்டா உள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 வரி ரசீதுகள் சாகுல் ஹமீது மகள் மைதீன் பீவி பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் பட்டா உள்ளதாகவோ, வரி ரசீதுகள் ஏற்பட்டுள்ளதாகவோ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.13 பட்டா ஆவணத்தில் சர்வே எண்.236/28 சின்ன முகமது ராவுத்தர் மகன் சேக் ராவுத்தர் என்று பட்டா எண். 135 உள்ளது என்றால் சரிதான், அதில் கண்ட சேக் ராவுத்தர் நான் என்றால் சரிதான். அரசால் ஒருவருக்கு ஒரு இலவச வீட்டடி பட்டாதான் வழங்கப்படும் என்றால் சரிதான். எனது பெயரில் உள்ள பட்டா இடத்தை எங்கள் ஊரைச்

சேர்ந்த அல்லா பிச்சை என்பவருக்கு விற்பனை செய்துவிட்டேன். வாதி காஜா முகைதீன் என்பவருக்கு சர்வே எண்.236/1 பட்டா எண்.340 என்று இடம் உள்ளதாக எனது எதிர் வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதியுடைய இடத்தில் நான் வீடு கட்டவில்லை என்றால் சரிதான். வாதியின் பெயரில் வீட்டு வரி ரசீதுகள் உள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. சாகுல் ஹமீது மனைவி மைதீன் பீவி பெயரில் தனி பட்டா உள்ளது என்றால் சரிதான். பி,வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்கள் 236/2, 236/9 என இரண்டு சர்வே எண்கள் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் வாதி அவருடைய சொத்திற்கே வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், எனது வீடு கிழக்கு பக்கம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த வழக்கு சொத்து அவருக்கு பாத்தியமானது என்றாலும், எனக்கு சொந்த வீடு இல்லை என்பதால் எனக்கு வழங்கப்பட்ட இலவச மனையடி பட்டா இடத்தை வேறொரு நபருக்கு விற்றுவிட்டு எனது மகள் வீடு கட்டும்பொழுது வாதியின் இடத்தில் தற்காலிகமாக குடியிருக்க அனுமதி கேட்டு குடியிருந்து வந்த நிலையில் வாதி கேட்கும்பொழுது வீட்டை காலி செய்யாததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வாதியின் வீட்டில் அத்துமீறி குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 28.01.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.01.28 16:52:02 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.